[1980 பிப்ரவரி 11

Export of Quinine

* Q. No. 104 Thiru. N. KITTAPPA Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state:

(a) Whether the State has sought the permission of the Central Government to export quinine from this State overseas and

(b) If so the details thereof:

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) 1964–65-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு அரசின் சின்கோனாத்துறை கொயினா உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி வணிகர்கள் மூலம் ஏற்றுமதி செய்து வருகிறது. இத் துறையின் உற்பத்திப் பொருட்கள் உயர்ந்த தரமுடையனவாக உள்ள காரணத்தால், வெளிநாட்டு அங்காடி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. எனினும், நாட்டில் மலேரியா மீண்டும் தோன்றிப் பரவியதன் காரணமாக, உள் நாட்டில் கொயினா உற்பத்திப் பொருட்களின் தேவை அதிகரித்ததால், இந்திய அரசு 25–7–1978-லிருந்து திடீரென்று கொயினா ஏற்றுமதிக்குத் தடையன்றை விதித்தது. தடை விதிக்கப்படுவதற்கு முன் மாநில அரசைக் கலந்தாலோசிக்கவில்லை. மாநில அரசு இப் பொருள் குறித்து இந்திய அரசிடம் முறையிட்டு, கொயினா ஏற்றுமதி குறித்து வலியுறுத்தியது. இந்திய அரசு மாநில அரசின் கோரிக்கைக் கிணங்க, 1978–79-ம் ஆண்டில் 3.25 டன் கொயினா பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. 1979–80-ம் ஆண்டில் 4,500 கிலோ அல்லது 4.5 டன் கொயினாப் பொருட்களை ஏற்றுமதி செய்ய அனுமதியளித்துள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, ஏற்றுமதி செய்யப்பட்ட அந்த இரண்டு வருஷங்களிலும், அந்த ஏற்றுமதியினால் என்ன வருமானம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது? அதோடு, இப்பொழுது இந்திய அரசாங்கத்திடம் ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று கேட்டிருப்பதனால், ஏற்றுமதி செய்வதற்காக, நம் தேவை போக, எவ்வளவு கொய்னா ''ஸ்டாக்'' இருக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்றுமதியின் மூலம் எவ்வளவு வருவாய் கிடைத்திருக்கிறது என்பதற்கு என்னிடத்திலே விவரம் இல்லை. ஆனால், உள்நாட்டுத் தேவைக்கு 4,500 கிலோ கிராம் போக, 3,500 கிலோ கிராம் இருப்பு இருக்கிறது என்று துறை அறிவித்துள்ளது,